பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 09 2024 **TUESDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய தண்ணீர் வாரம் இன்று தொடங்குகிறது.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்த தினத்தை ஒட்டி இன்று புதுதில்லியில் ரத்ததான முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. தில்லியில் புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக, ஆம் ஆத்மி கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

4. மேற்குவங்கத்தில் பயிற்சி மருத்துவர்களின் நான்கு கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

5. ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 1-0 என்ற கோல்கணக்கில் மொஹமதன் அணியை வென்றது.

**>>>>><<<<<**

நீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய தண்ணீர் வாரம் இன்று தொடங்குகிறது.

இதனை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 40 நாடுகளைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் உட்பட 4 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நீர்வளத்துறையைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நீர்வளத்துறை நிபுணர்கள், மத்திய – மாநில அரசுகளின் அமைச்சர்கள், உயரதிகாரிகள், கல்வி நிறுவனங்களை பேராசிரியர்கள், அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிஜேபி தேசிய தலைவர் திரு. ஜெ.பி நட்டா, புதுதில்லியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் ரத்ததான முகாமை தொடங்கி வைக்கவுள்ளார்.

பிரதமரின் வாழ்க்கை வரலாறு குறித்த கண்காட்சியையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஒடிசா மாநில அரசின் மகளிருக்கான நிதி திட்டத்தை இன்று புவனேஷ்வரில் தொடங்கி வைக்கிறார்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன்பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தகுதிவாய்ந்த 21 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு தவணைகளாக இத்தொகை பெண்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் முதல்கட்டமாக 10 லட்சம் பெண் பயனாளிகளுக்கு முதல் தவணைத் தொகையை திரு. நரேந்திர மோடி இன்று விடுவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில், 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை நாட்டிற்கு அர்ப்பணிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

சமுதாயத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு கல்வி முக்கியப் பங்காற்றுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மகளிர் அதிகாரமளித்தல் குறித்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்து கொண்டு பேசினார்.

கல்வியின் மூலமே சமத்துவமற்ற சூழ்நிலையை களைய முடியும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும் சமூகத்தில் பாலினப் பாகுபாடு சில சூழல்களில் நிலவுவதாக குறிப்பிட்ட அவர், பாலின சமத்துவம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நிர்வாகத்தின் அனைத்து பிரிவுகளிலும் மகளிர் பங்கேற்றுள்ளதாக அவர் கூறினார்.

அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு, திறமை ஆகியவற்றுக்கு அவர்கள் உதாரணமாக திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

முத்ரா கடன், பாதுகாப்புப் படையில் மகளிரின் பங்களிப்பு உள்ளிட்டவை மகளிரின் வளர்ச்சி என்ற நிலையிலிருந்து, மகளிர் தலைமையிலான வளர்ச்சி என்ற சூழல் ஏற்பட்டுள்ளதாக திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தில்லியில் புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக, ஆம் ஆத்மி கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் தில்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளருமான திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை துணைநிலை ஆளுநர் திரு. வினெய்குமார் சக்சேனாவை, திரு. அரவிந்த் கெஜ்ரிவால் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று, புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக கட்சியின் அரசியல் விவகாரங்கள் குழுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. அரவிந்த் கெஜ்ரிவால், முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்ததை அடுத்து, புதிய முதலமைச்சரை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் பதவி விலகல் அறிவிப்பு அரசியல் ரீதியானது என்றும் அவர் தமது அமைச்சரவையை கலைத்துவிட்டு தேர்தலை சந்திக்க வேண்டும் என்றும் தில்லி பிஜேபி தலைவர் திரு. வீரேந்திர சச்தேவா கூறியுள்ளார்.

>>>>><<<<<

கடற்படை தளபதிகள் மாநாடு, புதுதில்லியில் இன்று தொடங்கி, 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உரையாற்றவுள்ளார்.

முப்படைகளின் தலைமைத் தளபதி, ராணுவம் மற்றும் விமானப்படை தளபதிகளுடன் இணைந்து, முப்படைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து கடற்படை தளபதிகளுடன் அவர் விவாதிக்கவுள்ளார்.

தேசிய பாதுகாப்பு, கடற்படை தளபதிகளுக்கு இடையேயான செயல்பாடுகள் உள்ளிட்டவை குறித்து, இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

>>>>><<<<<

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலில் மொத்தம் ஆயிரத்து 31 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக அம்மாநில தலைமைத்தேர்தல் அதிகாரி திரு. பங்கஜ் அகர்வால் கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளான நேற்று மொத்தம் 190 வேட்பாளர்கள் தங்களது மனுக்களை திரும்பப் பெற்றதாக தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்ட ஆயிரத்து 746 வேட்புமனுக்களில் 338 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக தலைமை தேர்தல் அதிகாரி குறிப்பிட்டார்.

90 தொகுதிகளைக் கொண்ட ஹரியானா மாநில சட்டப்பேரவைக்கு, அடுத்த மாதம் 5ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 8ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில் இணையதளம் மற்றும் மொபைல் சேவைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அம்மாநில அரசு தளர்த்தியுள்ளது.

கல்வி நிறுவனங்கள் இன்று முதல் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தின் மூன்று பள்ளத்தாக்கு மாவட்டங்களில், கடந்த 10ஆம் தேதி முதல் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து, இணையதளம் மற்றும் மொபைல் சேவைகளை அம்மாநில அரசு நிறுத்தி வைத்தது.

தற்போது, அங்கு சட்டம் ஒழுங்கு சூழ்நிலை சீரடைந்ததை அடுத்து, மீண்டும் அந்த சேவைகளை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் பயிற்சி மருத்துவர்களின் நான்கு கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

காலிகட்டில் உள்ள தமது இல்லத்தில் பயிற்சி மருத்துவர்களுடன் நடைபெற்ற கூட்டத்திற்குப் பின் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

பயிற்சி மருத்துவர்களின் கோரிக்கையின்படி, கொல்கத்தா காவல்துறை ஆணையர் திரு. வினித் கோயல் அப்பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார் என்று அவர் குறிப்பிட்டார்.

கொல்கத்தா வடக்கு பகுதி காவல்துறை துணை ஆணையர் பணியிட மாற்றம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மருத்துவக் கல்வி இயக்குநர், சுகாதார சேவை இயக்குநர் ஆகியோரும் அப்பணியிலிருந்து நீக்கப்படுவதாக அவர் கூறினார்.

இதையடுத்து, பயிற்சி மருத்துவர்கள் உடனடியாக பணிக்கு திரும்புமாறு செல்வி மம்தா பானர்ஜி வலியுறுத்தினார்.

கொல்கத்தாவில் அண்மையில் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர், கொலை செய்யப்பட்டதை அடுத்து, பயிற்சி மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அவர்களுடன் அரசு மேற்கொண்ட பேச்சுக்களுக்குப் பிறகு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு காரணமாக, மலப்புரம் மாவட்டத்தில் **Tiruvaly, Mampad** பகுதிகளில் உள்ள ஐந்து வட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

24 வயதுடைய மாணவர் ஒருவர் நிபா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்ததை அடுத்து, இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள், முகக்கவசம் அணியுமாறு மலப்புரம் மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில், 50 பேர் கொண்ட சுகாதாரப் பணியாளர்கள் **Tiruvaly** பகுதியில் காய்ச்சல் உள்ளிட்ட உடல்நலக் குறைவு பாதிப்பு ஏற்பட்டவர்கள் குறித்து, வீடு வீடாக சென்று தகவல்களை திரட்டியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

மத்தியப் பிரதேச மாநிலத்தில் இன்று மீண்டும் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தீவிரமடைந்துள்ளதால், அடுத்த 24 மணிநேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தில் 38 மாவட்டங்களில் இன்று கன முதல் மிககனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நட்பு நாடுகளின் ஆதரவால், இலங்கை பெரும் பயனடைந்துள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. ரனில் விக்கிரமசிங்கே தெரிவித்துள்ளார்.

அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், இந்திய அரசின் ஒத்துழைப்பால் திரிகோணமலையில் பெரும் வளர்ச்சி ஏற்படும் என்று கூறினார்.

**>>>>><<<<<**

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 1-0 என்ற கோல்கணக்கில் மொஹமதன் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோவா - ஜாம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

தேசிய மகளிர் கால்பந்து அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக சந்தோஷ் காஷ்யப் நியமிக்கப்பட்டுள்ளதாக அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

பிரியா துணை பயிற்சியாளராகவும், ரகுவீர் பிரவீன் கனோல்கர் கோல்கீப்பர் பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**>>>>><<<<<**

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Hulunbuir** –ல் நடைபெறவுள்ள இப்போட்டி, பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>END<<<<<**